## நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.
## சி.சி. 59/2020

2023 ம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 7 வது நபாின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. செந்தில்நாதன் | வயது | 59 |
| த.பெ.(அ)க.பெ. | ஆறுமுகம் | தொழில் | அரசு முதுநிலை மருத்துவர் |
| ஊர்/பணிபுரியுமிடம் | திருப்பத்தூர் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை :

நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் அரசு முதுநிலை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.05.2019 அன்று நான் பணியில் இருந்த போது மாலை சுமார் 4.30 மணியளவில் சத்யா (வயது 45) என்ற பெண்மணியை குமார் என்பவர் அழைத்து வந்தார். மேற்படி நோயாளி சத்தியாவை விசாரித்த போது அவரை அதே தினத்தில் மாலை 3.00 மணியளவில் சத்தியாவின் வீட்டின் அருகில் தெரிந்த நபர் காய்கறி நறுக்கும் கத்தியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது பின்வரும் காயங்கள் காணப்பட்டது,

1. 7 x 2 x 1/2 செ. மீ அளவில் தலையில் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

பின்னர் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு அவர் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சைக்கு பின் 15.05.2019 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். மருத்துவமனை ஆவணங்கள் படியும், என்னிடம் அளிக்கப்பட்ட சான்றாவணங்களின் அடிப்படையிலும் மேற்கூறிய காயம் சாதாரண காயம் என்று என்னால் 30.05.2019 அன்று சான்று அளிக்கப்பட்டது. **நான் வழங்கிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=

என்னுடைய போலீஸார் வாக்குமுலத்தில் நான் வஜ்ஜிரம் என்பவரது வீட்டிற்கு முன்பு நடந்த சம்பவத்தில் காயம்பட்டதாக கூறி வந்த நோயாளிக்கு சிகிச்சை அளித்ததாக கூறியுள்ளேன் என்றால் மேற்படி நோயாளிக்கு சிகிச்சை அளித்தது உண்மை ஆனால் அடிதடி சம்பவம் வஜ்ஜிரம் வீட்டிற்கு முன்பு

நடந்ததாக கூறியுள்ளது தவறு நான் சம்பவயிடத்தை பற்றி போலீஸாரிடம் அப்படி எதுவும் சொல்லவில்லை. என்னிடம் காயம்பட்ட ஒரு நபர் தான் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். மேற்படி முதல் விசாரணையில் சொல்லியுள்ள காயம் கரடுமுரடான கல்பாதையில் தவறி விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

மறுவிசாரணை= இல்லை